**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண்.381 நாள்: 12.08.2026

**பெருநகர சென்னை மாநகராட்சியில் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக பயன்படுத்தப்படவுள்ள வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் அனைத்து வகை உபகரணங்களின் செயல்பாடுகள் குறித்த முதற்கட்ட சரிபார்ப்பு பணியினை இணை ஆணையாளர் (பணிகள்) திரு.செ.சரவணன், இ.ஆ.ப., அவர்கள், இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, மழைநீர் வடிகால் கட்டுதல், மழைநீர் வடிகால் மற்றும் வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் தூர்வாரும் பணிகள், நீர்நிலைகளில் மேம்பாட்டுப் பணிகள், கால்வாய்களில் தூர்வாரும் பணிகள், விழும் நிலையில் உள்ள மரங்களின் கிளைகளை கத்தரித்து அகற்றுதல், நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் நீரேற்றும் மோட்டார்கள் பராமரிப்புப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, பெருநகர சென்னை மாநகராட்சியில் பருவமழையின்போது மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக பயன்படுத்தப்படவுள்ள வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் அனைத்து வகை உபகரணங்களை சரிபார்த்து தயார்படுத்தும் முதற்கட்ட சரிபார்ப்புப் பணி இன்று (12.08.2026) மேற்கொள்ளப்பட்டது.

இதில் பெருநகர சென்னை மாநகராட்சியி உள்ள வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் அனைத்து வகை உபகரணங்களின் செயல்பாடுகளை சரிபார்த்து தயார்நிலையில் வைக்கும் பணியானது அனைத்து மண்டல அலுவலகங்கள், வார்டு அலுவலகங்கள் மற்றும் ரிப்பன் கட்டட வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டது.

ரிப்பன் கட்டட வளாகத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் அனைத்து வகை உபகரணங்களின் செயல்பாடுகள் சரிபார்க்கும் பணியினை மாநகராட்சி இணை ஆணையாளர் (பணிகள்) திரு.செ.சரவணன், இ.ஆ.ப., அவர்கள், பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 2 ஆம்பிபியன், 3 மினி ஆம்பிபியன், 6 ரொபோடிக் மல்டிபர்பஸ் எஸ்கவேட்டர் இயந்திரங்கள், 3 ஆம்பிபியஸ் எஸ்கவேட்டர் இயந்திரங்கள், 7 ரீசைக்ளர் வாகனங்கள், 15 ஹைட்ராலிக் மர அறுவை இயந்திரங்கள், லாரியில் பொருத்தப்பட்ட 10 கிரேன்கள், 5 ஹைட்ராலிக் ஏணிகள், 6 ஜே.சி.பி. இயந்திரங்கள் (Front end Loaders), 7 ஹைட்ராலிக் எஸ்கவேட்டர் இயந்திரங்கள், 60 ஸ்கிட் ஸ்டீயர் லோடர்கள் (Skid Steer Loader), 25 குதிரைத் திறன் கொண்ட நீரினை அகற்றும் மோட்டார் பம்புகள், மிகவும் தாழ்வான பகுதிகளில் வெள்ள நீரினை

வெளியேற்ற உயர்திறன் கொண்ட மோட்டார் பம்புகள் மற்றும் டிராக்டர் மூலம் நீரிறைக்கும் மோட்டார் பம்புகள் ஆகியவை தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இதில் ஏதாவது சிறிய பழுது இருந்தாலும், அதனை உடனடியாக சரிசெய்வதற்காக வார்டு ஒவ்வொன்றிற்கும் தலா ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதியினை பருவமழை காலத்திற்கு முன்னதாக மேற்கொள்ள வேண்டிய பணிகளுக்காக பயன்படுத்திக் கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், 80 முதல் 100 குதிரைத் திறன் கொண்ட நீரிறைக்கும் மோட்டார் பம்புகள், டிராக்டர் மூலம் இயங்கும் நீரிறைக்கும் மோட்டார் பம்புகள் தேவையின் அடிப்படையில் வாடகை முறையில் பணியமர்த்தப்படும்.

**இந்த ஆய்வின்போது, இணை ஆணையாளர் (பணிகள்) அவர்கள் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்ததாவது:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், சென்னை மாநகரில் வடகிழக்குப் பருவமழை 2026 மற்றும் எல் நினோ பணிகளுக்கான முன்னேற்பாட்டுப் பணிகள் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலமாக தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள், மதிப்பிற்குரிய தலைமைச் செயலாளர் ஆகியோரின் ஆய்வுக் கூட்டத்திலும், மழைநீர் தேக்கமின்றி எளிதாகச் செல்லும் வகையில் பணிகள் மேற்கொள்ள வேண்டுமோ, அந்த பணிகள் அனைத்தையும் மாநகராட்சி, நீர்வளத்துறை, சென்னை குடிநீர் வாரியம் மற்றும் மின்சாரத்துறை உள்ளிட்ட பிற சேவைத் துறைகளும் ஒருங்கிணைத்து மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் சுமார் 3,000 கிலோமீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால்கள் ஏற்கனவே கட்டப்பட்டுள்ளது. இன்னும் சில பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த மழைநீர் வடிகால்களில் தூர்வாரும் பணிகள் பல்வேறு மண்டலங்களில் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இதில் சுமார் 1,300 கிலோமீட்டர் நீளத்திலான மழைநீர் வடிகால்களில் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் 1,10,082 வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் (Silt Catch Pit) மழைநீர் சீராகச் செல்லும் வகையில் வண்டல்கள் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கால்வாய்களில் தூர்வாரும் பணிகள் ட்ரோன்கள் மூலம் ஆய்வு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

இதில் பருவமழைக் காலங்களில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் பயன்படுத்தப்படவுள்ள இயந்திரங்கள், கனரக இயந்திரங்கள், 5 குதிரைத் திறன் முதல் 150 குதிரைத் திறன் கொண்ட மோட்டார் பம்புகள் உள்ளன. இவற்றில் சிறிய பழுதுகள்

ஏதாவது இருக்கிறதா என ஆய்வு மேற்கொண்டு, அதன் செயல்பாடுகளை சரிபார்க்க வேண்டும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதன் அடிப்படையில், இன்று முதற்கட்டமாக இந்த சரிபார்ப்பு ஒத்திகை (First Mock Drill) நடைபெற்றது.

முதற்கட்டமாக நடைபெற்ற இந்த சரிபார்ப்பு ஒத்திகையில் பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்திலும், அனைத்து மண்டலங்களிலும் இருக்கக்கூடிய இயந்திரங்கள் மற்றும் மோட்டார் பம்புகளின் செயல்பாட்டு நிலையினை சரிபார்த்து, ஏதாவது சிறிய பழுதுகள் இருந்தால், அதை உடனடியாக சரி செய்வதற்கு ஒவ்வொரு மண்டலத்திற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதுமட்டுமில்லாமல் குறிப்பாக சாலைகளில் இருக்கக்கூடிய தற்காலிக பள்ளங்கள் மற்றும் குழிகளை சரிசெய்வதற்கு ஒவ்வொரு மண்டலத்திற்கும் சுமார் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த வடகிழக்குப் பருவமழையை எதிர்கொள்வதற்கு அத்தியாவசிய மற்றும் அவசியப் பணிகளில் எந்தவித தயக்கமும் சுணக்கமும் இல்லாமல் மாநகராட்சிப் பணிகள் மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

அதனடிப்படையில் பல்வேறு ஆய்வுக்கூட்டங்கள் உயர்நிலையில் நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாநகராட்சியிலும் மதிப்பிற்குரிய ஆணையர் அவர்களின் தலைமையிலும் இதுதொடர்பான கூட்டங்கள் நடத்தப்பட்டது. கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் எந்தெந்த பணிகளுக்கெல்லாம் நிதி ஒதுக்கீடு, நிர்வாக ஒப்புதல்கள், அவசர கால நிதி ஒதுக்கீடு ஆகியவற்றிற்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சியில் உள்ள 44 நீர்வழிக் கால்வாய்கள் மற்றும் நீர்வளத் துறையின் கூவம், அடையாறு மற்றும் பக்கிங்ஹாம் கால்வாய் ஆகிய 3 பெரிய ஆறுகள் மற்றும் ஓட்டேரி நல்லா, விருகம்பாக்கம் கால்வாய், வீராங்கல் ஒடை உள்ளிட்ட 44 நீர்வழிக் கால்வாய்களிலும் தூர்வாரும் பணிகளை அந்தத் துறையின் மூலமாக மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இதன் தொடர்ச்சியாக பணிகள் நடைபெற்று வருகிறது.

செப்டம்பர் 30ஆம் தேதிக்குள் அனைத்துப் பணிகளையும் முடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் சென்னைக் குடிநீர் வாரியம், மின்சாரத்துறை உள்ளிட்ட என்னென்ன துறைகளில் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறதோ அவற்றை விரைந்து முடிக்க வேண்டும் என்று மாநகராட்சியின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமில்லாமல் தலைமைச் செயலாளரின் ஆணையின் அடிப்படையில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் இணை ஆணையர் தலைமையில் பல்வேறு துறைகளுக்கான ஒருங்கிணைப்புக் கூட்டம், சாலை வெட்டுப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்காக நடத்தப்படுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எல் நினோவிற்காகவே ஒரு தனிப்பிரிவு வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய வழிகாட்டுதலையும் வாங்கியிருக்கிறோம். அது மட்டுமில்லாமல் மாநகராட்சி, சென்னை மெட்ரோ நிறுவனம், நீர்வளத்துறை ஆகியவற்றின் சார்பில் ஒரு தொழில்நுட்பக் குழு அமைக்கப்பட்டு, கடந்த பருவமழையின் போது எங்கெங்கெல்லாம் மழைநீர் தேங்கி நின்றதோ, அந்த இடங்களை ஆய்வு செய்து அவர்களும் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையின் அடிப்படையிலும் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

கடந்த 2023 மிக்ஜாம் புயலின் போது 383 தாழ்வான இடங்களில் மழைநீர் தேங்கி நிற்கும் பகுதிகளைக் கண்டறிந்திருக்கிறோம். அங்கு மழைநீர் வடிகால்கள் கட்டும் பணிகள் சில இடங்களில் முடிந்திருக்கிறது. சில இடங்களில் தற்காலிகமாக மோட்டார் பம்புகள் மூலம் மழைநீரினை வெளியேற்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறாக 2023, 2025, 2015 பருவமழைக் காலங்களில் உள்ள அனுபவங்களை வைத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வழக்கமாக வடகிழக்குப் பருவமழை மூலம் 800 மி.மீ. மழை நமக்கு கிடைக்கும். ஆனால் ஒரே நாளில் 'மேக வெடிப்பு' (Cloud Burst) போன்ற சூழல் வந்தாலும், அதனை எதிர்கொள்வதற்குத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுபோன்ற சூழலில் பொதுமக்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகள் விரைவில் அரசு மூலம் வழங்கப்படும். மாநகராட்சியைப் பொறுத்தவரை தேங்கும் மழைநீரை எவ்வளவு சீக்கிரம் வடிகால்கள் மூலமாக வெளியேற்ற முடியுமோ அதற்கான முழு முயற்சியையும், நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம்.

மழைநீர் வடிகால்களில் 1,300 கி.மீ தூரத்திற்கு வண்டல்கள் (De-silting) தூர்வாரும் பணிகள் ட்ரோன்கள் மூலம் ஜிபிஎஸ் (GPS) கண்காணிப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வேளச்சேரி, பள்ளிக்கரணை, ஒக்கியம் மடுவு போன்ற பகுதிகளில் நீர்வளத்துறை, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், நெடுஞ்சாலைத் துறை மற்றும் மாநகராட்சி இணைந்து கள ஆய்வுகள் மேற்கொண்டு பணிகளை விரைவுபடுத்தி வருகின்றன.

மாநகராட்சியிடம் ஏற்கனவே 700 மோட்டார் பம்புகள்/இயந்திரங்கள் உள்ளன. மழைக்காலத் தேவைகளுக்காக மேலும் 150 கூடுதல் இயந்திரங்கள் (100 HP டிராக்டரில் பொருத்தப்பட்ட மோட்டார் பம்புகள் உட்பட) வாடகை அடிப்படையில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, தலைமைப் பொறியாளர்கள் திரு.பி.சங்கரவேலு, திரு.சி.ஏ.பாலமுரளி மற்றும் கண்காணிப்புப் பொறியாளர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**